## நாமக்கல் - டிரினிடி மகளிர் கல்லூரியின் சார்பில் அணியாபுரத்தில் நடைபெற்ற இலவச மருத்துவ முகாம்

நாமக்கல் - டிரினிடி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் உன்னத் பாரத் அபியான் அமைப்பு, கல்லூரி புதுமை மையம், நாமக்கல் - தங்கம் மருத்துவமனை, நாமக்கல் - ரோட்டரி சங்கம், நாமக்கல் - இன்னர்வீல் சங்கம் மற்றும் இந்திய மருத்துவக் கழகத்தின் மகளிர் மேம்பாட்டு நிலைக்குழு ஆகியவை இணைந்து 24.03.2023 அன்று இலவச மருத்துவ முகாமினை நாமக்கல் மாவட்டம் - மோகனூர் வட்டம் - அணியாபுரம் கிராமத்தில் நடத்தியது.

இந்நிகழ்விற்கு கல்லூரியின் செயல் இயக்குநர் அருணா செல்வராஜ் தலைமை தாங்கினார். முதல்வர் எம். ஆர். லட்சுமிநாராயணன் முன்னிலை வகித்தார். இயக்குநர் - உயர்கல்வி அரசுபரமேசுவரன் அனைவரையும் வரவேற்றார்.

இம்முகாமில் பொது மருத்துவம், உயரம், எடை சரிபார்ப்பு, நீரிழிவு, இரத்த அழுத்தம், பல், கண், காது, மூக்கு, தொண்டை, இதயத் துடிப்பு, புற்றுநோய் கண்டறிதல் போன்ற பிரச்சனைகளுக்கு இலவசமாக ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் நாமக்கல் - தங்கம் மருத்துவமனை மருத்துவர்கள் ஆர். குழந்தைவேல், எம். மல்லிகா குழந்தைவேல், ஆர். சத்யா, ஆர். ஜி. சசிகுமார், நாமக்கல் பல் மருத்துவர் ஆர். கே. அருண், கேரளாவினை சார்ந்த பல் மருத்துவர்கள் சஜித், மேரி, அம்லா, மைலிஷா, மயூரிபிரியா உட்பட பலர் கலந்து கொண்டு இலவச மருத்துவ ஆலோசனைகளை வழங்கினர்.

இந்த முகாமில் நாமக்கல் - ரோட்டரி சங்கத் தலைவர் ஆர். விஸ்வநாதன், நாமக்கல் - இன்னர்வீல் சங்கத் தலைவர் வீ. நிர்மலா ஆகியோர் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை அணியாபுரம் ஊராட்சி மன்றத் தலைவர் எஸ். முருகேசன், கல்லூரியின் உன்னத் பாரத் அபியான் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் எஸ். ஹேமலதா, அவ்வமைப்பின் பிரதிநிதிகள் ஆர். நவமணி, எஸ். பிரியா, டி. பிரபா மற்றும் நிர்வாக அலுவலர் என். எஸ். செந்தில்குமார் ஆகியோர் செய்திருந்தனர்.

இந்நிகழ்வின் மூலம் அணியாபுரம் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளை சார்ந்த 136 பேர் பயன்பெற்றனர்.